ஸ்ரீ

ஸ்ரீ சுவேதகிரி என்னும்

திருவெள்ளறையின் வைபவம்

எழுதியவர்:

எஸ். நரசிம்ம அய்யங்கார்
உத்தம நம்பி திருமாளிகை, மேல் உத்தரவீதி, ஸ்ரீரங்கம்

சாது அச்சுக்கூடம்
சென்னை

முகவுரை

இச்சிறிய நூல், சென்னை ஹிந்துமத பரிபாலன போர்டு கமிஷனர் கோவை. ம. இராமச்சந்திர செட்டியார் அவர்களின் உத்தரவுப்படி வெளி தேசங்களிலிருந்து வரும் யாத்திரிகர்களுக்கு, இந்தக் கோவிலில் உள்ள ஒவ்வொரு சந்நிதியின் விசேஷத்தையும், மண்டபங்களின் பிரயோஜனத்தையும் தெரிந்து கொள்ளுவதற்காகத் தயாரிக்கப்பட்டது. இந்தப் புத்தகத்தை எழுதிக் கொடுத்த ஸ்ரீரங்கம் மேலஉத்திர வீதி, உத்தமநம்பி திருமாளிகையில் இருக்கும் ஸ்ரீமான் எஸ். நரசிம்ம அய்யங்கார் அவர்களுக்கு என் நன்றியைச் செலுத்துகிறேன்.

ஸ்ரீரங்கநாதஸ்வாமி
வகையரா
தேவஸ்தானம்,
ஸ்ரீரங்கம்

D. மாதவன் பிள்ளை, B. A., B. L.
ஆக்டிங் எக்ஸிகியூடிவ் ஆபீஸர்.

ERRATA LIST

திருவெள்ளறை வைபவம்

Page	Line	For	Read
5	last but one line	உலகில்	ஊரில்
7	5	ஆதிநாயகமாய்	ஆதிதாயகமாய்
12	14	சுவேதநாதனுக்கு	சுவேதகிரிநாதனுக்கு
15	18	புண்டரீகாக்ஷ ஸந்நிதி	புண்டரீகாக்ஷர் ஸந்நிதி
16	10	படிக்கட்டில் காணமுடியாது	படிக்கட்டில் உள்ளவர்கள் காணமுடியாது
18.	18	பிரகாரத்தில் பாதியில்	பிரகாரத்தில் ஆதியில்
21	6	நாழிகேட்டான்	நாழிகை கேட்டான்
	9	ராஜோசாரமாய்	ராஜோபசாரமாய்
22	14	மறையுள்ளா னறையா	மறையுள்ளறையா
24	11	அநநதன் ஆதிசேஷன்	அநந்தன் (ஆதிசேஷன்)
	12	நின்றுகொண்டிருக்கிறார்கள்	நின்றுகொண்டிருக்கிறார்
25	18, 19	ஸாதிப்பித்திருக்கிறார்	ஸூசிப்பித்திருக்கிறார்


அட்டவணை

திருவெள்ளறை, ஸ்ரீபுண்டரீகாக்ஷ பெருமாள் கோவிலிலுள்ள சந்நிதிகள், மண்டபங்கள் முதலியவைகளின்

விவர ஜாபிதா

1. பதினெட்டாம்படி கோபுர வாசல்
2. நூற்றுக்கால் மண்டபம்
3. ஸ்ரீமார்க்கண்டேய மகரிஷி, சிபிச்சக்ரவர்த்தி தபஸ் பண்ணிய குகை
4. நீராழி மண்டபம்
5. க்ஷீர புஷ்கரணி
6. மணவாளமாமுனி சந்நிதி
7. பூங்கிணறு
8. சின்னக்குடவரை கோபுர வாசல்
9. கந்த புஷ்கரணி
10. சக்கரத்தாழ்வார் சந்நிதி
11. தாயார் சந்நிதி
12. ஆரியபடாள் வாசல்
13. வாகன அறை
14. உக்ராணம்
15. சேனைமுதலியார் சந்நிதி
16. ஏகாதசி மண்டபம்
17. நாழிகேட்டான் வாசல்
18. தக்ஷிணாயன வாசல்
19. உத்தராயண வாசல்
20. கர்ப்ப கிரஹம்
21. சந்நிதி கருடன்

திருவெள்ளறை ஸ்ரீ புண்டரீகாக்ஷ பெருமாள் கோவில்



ஸ்ரீ
ஓம்
ஸ்ரீ பங்கஜவல்லி ஸமேத ஸ்ரீ புண்டரீகாக்ஷாய நம:

ஸ்ரீ சுவேதகிரி என்னும்
திருவெள்ளறையின் வைபவம்

திருவெள்ளறையின் விவரம்

திருவெள்ளறை என்னும் திவ்யதேசம், திரிச்சிராப்பள்ளி ஜில்லாவில், திரிச்சிராப்பள்ளியிலிருந்து துறையூர் போகும் ரஸ்தாவில் 12-வது மைலில், மேற்படி ரஸ்தாவிற்குத் தெற்கில் 2 பர்லாங்கு தூரத்திலிருக்கிறது.

இந்த ஊரிலுள்ள ஸ்ரீபுண்டரீகாக்ஷப் பெருமாள் சந்நிதி ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்தின் மானேஜ்மெண்டுக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்ட கோவில்களில் ஒன்று. இந்தக் கோவிலுக்கு வேண்டிய படித்தரம் வகையராக்கள் ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதஸ்வாமி சந்நிதியிலிருந்தே கொடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கோவிலின் திருவாபரணங்கள் உத்ஸவகாலம் நீங்கலாக மற்றக் காலங்களில் ஸ்ரீரங்கம் கோவிலிலேயே பத்திரப் படுத்தி வைக்கப்படுகின்றன.

சுவேதகிரி அல்லது திருவெள்ளறை என்ற பெயர் ஏற்பட்ட காரணம்

இந்த உலகில் வெண்மையான பாறைகள் அதிகமானதாலும், இவ்விடம் கோயில் கொண்டருளும்

ஸ்ரீபுண்டரீகாக்ஷனும் பங்கயச்செல்வியும் வெண்மை யான பாறையாலாகிய ஒரு சிறிய குன்றின் பேரில் எழுந் தருளியிருக்கிறபடியாலும் அந்தக் குன்றிற்கும் அது வுள்ள ஊருக்கும் சுவேதகிரி அல்லது வெள்ளறை என் கிற பெயர் உண்டாயிற்று.

தவிர ஸ்ரீதேவியான பங்கயச்செல்வி இந்த இடத் தில் தபசு பண்ணி இந்தத் திவ்விய தேசத்தைத் தன் னுடையதாக்கிக் கொண்டபடியாலும், புண்யஸ்தலங் களின் மேன்மை தோற்றும்படி, வடமொழி "ஸ்ரீ"க் குப் பதிலாகத் தமிழில் "திரு" என்பதைச் சேர்த்துச் சொல்வது வழக்கமானபடியாலும், வெள்ளறையுடன் திருவைக்கூட்டி "திருவெள்ளறை" என்று அழைக்கப் படுகிறது. வடமொழியில் "சுவேதகிரி" என்றும் "சுவேதாத்ரி" என்றும் சொல்லப்படுகிறது.

சுவேதகிரி என்னும் திருவெள்ளறை மஹிமை

இது ஆழ்வார்களால் பாடப்பட்ட திவ்ய தேசங் களுள் மிக்க புராதனமானது. இது ஆதி திவ்ய தேச மென்று சொல்லப்படுகிறது. இந்த ஸ்தலத்தை ஆழ்வார்களுக்குள் பெரியாழ்வாரும், திருமங்கையாழ் வாரும் பதிகங்கள் பாடிப் போற்றியுள்ளார்கள்.

கருடன், பூமிதேவி, மார்க்கண்டேயர், சிபிச் சக்கர வர்த்தி முதலானவர்களுக்குப் பகவான் பிரத்தியக்ஷமான இடம் இதுவே.

தவிர வட இந்தியாவிலுள்ள ஆரியாவர்த்தம் என் னும் இடத்திலிருந்து ஆரியர்கள் முதல் முதலில் இந்த ஊரில் குடியேறி அதன் பிறகு சோழநாடெங்கும் பரவி, அது காரணமாகச் சோழியர்கள் என்னும் பெயரைப்

பெற்றுச் சேரசோழ பாண்டிய நாடெங்கும் வியாபித்து பிரம்மசிகையாகிய பூர்வசிகை (முன் குடுமி)யையோ அபரசிகை என்னும் பின் குடுமியையோ வைத்துக் கொண்டு, தங்களைச் சோழியர் என்று சொல்லிக் கொள்ளும் சகல வருணத்தவர்களுக்கும் ஆதிநாயகமாய் ஏற்பட்டது இந்த ஊரே.

மேலும் வேதாந்த தேசிகர் அருளிச் செய்தபடி 'மூளுந்தவநெறி மூட்டிய நாதமுனி கழலே நாளும்' தொழுதவரும், நன்னெறியை மணக்கால் நம்பிக்கு எடுத் துரைத்தவருமான உய்யக்கொண்டார் அவதரித்த ஸ்தல மும் இதுவே.

உடையவ (ராமாநுஜர்)ருடைய சிஷ்யராய் நடா தூரம்மாளைத் தமது சிஷ்யராக்கிக்கொண்டு அவருக்கு ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் சொல்லி அதிலுள்ள தத்துவங் களை நன்ருகப் போதித்து ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம் சொல்லுவதில் நடாதூரம்மாளுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்னும் புகழ்மாலையைச் சூட்டும்படி கிருபை பண்ணிய மஹானுபாவரான எங்களாழ்வான் பிறப்பால் புகழ்பெற்று விளங்குமிடமும் இதுவே.

மேற்கூறிய வைபவங்களைத் தெரிந்துகொண்ட உடையவரும் இந்த க்ஷேத்திரத்தில் சில ஆண்டுகள் வாசம் செய்து வைஷ்ணவர்களுக்கு இந்த க்ஷேத்திர வாசம் அவசியமானதென்று வெளியிட்டிருக்கிருர்.

அப்படி உடையவர் வாசம் செய்ததின் ஞாபகார்த்த மாக அவர் வசித்த இடத்தில் அவருக்கு ஒரு கோவிலும், ஊருக்கு மேற்கில் அவர் பெயரால் ஒரு குளமும் கட்டப் பட்டு இருக்கிறது.

சுவேதகிரி என்னும் திருவெள்ளறை க்ஷேத்ர உற்பத்தி

ஸ்ரீயப்பதியான சர்வேஸ்வரன் க்ஷீராப்தியில் பன்னகசயனத்தின் மேலிருந்துகொண்டு லக்ஷிமி பிராட்டியுடன் உல்லாஸமாய் வார்த்தையாடிக் கொண்டிருக்கும் போது, தேவியை நோக்கி "உனக்கு வேண்டியது ஏதாவது உண்டா?" என்று வினவ, பிராட்டியும் "ஸ்வாமி, அடியேன் பிறந்த இந்த க்ஷீராப்தியில் தேவரீரைக் காட்டிலும் அடியாளுக்கு அதிகமான ஆதிபத்தியம் அருள வேண்டு"மென்று பிரார்த்தித்தாள். அதைக் கேட்ட பகவானும் பிராட்டியைப் பார்த்து "உன்னுடைய பிரார்த்தனையை இவ்விடத்தில் நிறைவேற்றிவைக்க முடியாது. அபேக்ஷையானுல் பூமியில் அர்ச்சா விக்ரஹமாய் நாம் ஆவிர்ப்பவித்து நீ கோரிய வரத்தை அளிப்போம். நாமும் கூடிய சீக்கிரத்தில் மார்க்கண்டேய மஹரிஷி, சிபிச் சக்கரவர்த்தி முதலானவர்களுக்கு ஸேவை சாதிக்க சுவேதகிரியில் ஆவிர்ப்பவிக்கப் போகிறோம். அப்பொழுது உனது இஷ்டத்தைப் பூர்த்தி செய்விக்கின்றோம். அதுவரையில் நீயும் நம்மைக் குறித்து அந்த வெள்ளறையில் தபசுசெய்துகொண்டிரு" என்று அருளிச் செய்தார். பகவான் நியமனப்படி ஸ்ரீதேவியும் வெள்ளறையிலுள்ளதும் தற்காலம் பூங்கிணறு என்று அழைக்கப்படுவதுமான கிணற்றிலுள்ள ஒரு குகையில் பகவான் ஆவிர்ப்பவிப்பதை எதிர்பார்த்த வண்ணமாய் தபசு செய்யத் தொடங்கினுள். அதுமுதல் இந்த க்ஷேத்திரம் ஒரு புண்ய ஸ்தலமாயிற்று.

ஸ்ரீ புண்டரீகாக்ஷர் சுவேதகிரியில் ஆவிர்ப்பவிப்பது

அயோத்தியில் அரசுபுரிந்த சக்கரவர்த்திகளில் ஒருவரான சிபிச்சக்கரவர்த்தி தமது குலகுருவான வசிஷ்ட

ரைத் தெண்டனிட்டு "ஸ்வாமி, அடியேனுக்கு ஹிதமான தும் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அளிக்கக்கூடியதுமான ஒரு மார்க்கத்தை உபதேசித்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தார். வசிஷ்டரும் மனமகிழ்ந்து "சக்கர வர்த்தியே! ஒவ்வொருவரும் தத்தம் வர்ணத்திற்குரிய தர்மங்களைக் குறைவின்றி அனுஷ்டிப்பதைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை. அதுவே சகல அபீஷ்டங்களை யும் கொடுக்கும். ஆனபடியால் உம்முடைய க்ஷத்திரிய தர்மத்தைக் குறைவின்றி அனுஷ்டித்து வாரும், துஷ்ட நிக்ரஹமும், சிஷ்ட பரிபாலனமும் செய்து வரவேண்டி யது அவசியம். அதை அனுஷ்டித்து வருவீராகில் மோக்ஷம் தன்னிடையே கிடைக்கும் என்பதில் சந்தேக மில்லை" என்ருர். இந்த வார்த்தைகளைக் கேட்ட சிபிச் சக்கரவர்த்தியும் தமது சாம்ராஜ்யத்தில் சிறியதால் பெரி யது நலியாமல் ஸாதுஜன ஸம்ரக்ஷணம் பண்ணி வந்தார். இப்படி அரசாண்டு வருகையில் இந்தியாவின் தென் பக் கத்திலுள்ள அரக்கர்களால் மஹரிஷிகளுக்கு ஹிம்ஸை யும், இடைஞ்சலும் ஏற்படுவதைக்கேட்டு அவ்வரக் கர்களைச் சிக்ஷித்து ஸாதுஜன பரித்ராணம் பண்ண நினைத்து, சிபிச்சக்கரவர்த்தி தம்முடைய படையை அழைத்துக்கொண்டு தெற்கு நோக்கி வந்துகொண் டிருந்தபோது ஒரு நாள் நீலீ வனத்திலுள்ள சுவேத கிரியின் பக்கத்தில் தங்கி இளைப்பாறும்படி தம் சேனை களுக்கு உத்தரவிட்டார். அன்றைய தினம் சூரியன் அஸ்தமன மானவுடன் என்றும் கண்டிராத ஒரு பெரிய சுவேதவராகம் சேனு வீரர்கள் முன் தோன் றிற்று. அவர்களும் அதைத் துறத்த எத்தனித்தவுடன் ஒருசமயம் சேனுவீரர்களுக்குச் சமீபத்திலும், ஒரு சமயம் அவர்களுக்குத் தூரத்திலும் தோன்றுவதும் மறைவது

மாய் அன்றைய இரவு முழுவதும் தொல்லை கொடுத்தது. இதைக்கண்ட படைவீரர்களும் சக்கரவர்த்தியினிடம் சென்று நடந்த விருத்தாந்தத்தைத் தெரிவித்தனர். சக்கரவர்த்தியும் ஆச்சரியமடைந்து தாமே நேரில் சென்று அந்த வராகத்தைச் சம்ஹாரம் செய்யமுயன்றும் அது பயன்படவில்லை. இதற்குள் பொழுதுபுலரும் வேளையாய் விட்டது. வராகமும் சுவேதகிரியை அடைந்து அதன் பேரில் ஏறி, தன் சரீரத்தைச் சுருக்கிக்கொண்டு அதன் உச்சியிலுள்ள ஒரு புற்றுக்குள் நுழைந்துவிட்டது. இதைக்கண்டு சக்கரவர்த்தி தன் படைகளை அழைத்து "இவ்விடம் ஏதாவது விசேஷமிருக்கவேண்டும்; மஹான்கள் யாராவது தபசு புரிகிருர்களா பார்த்துவாருங்கள்" என்று கட்டளையிட்டார். படர்களும் கிரியைச் சுற்றிப் பார்த்துவந்து மார்க்கண்டேயர் தபசுசெய்வதாய்த் தெரிவிக்க, சக்கரவர்த்தியும் மார்க்கண்டேயரிடம் சென்று அவர் திருவடிகளில் தண்டம் சமர்ப்பித்துத் தான் கண்ட அதிசயத்தைத் தெரிவித்தார். மார்க்கண்டேயர் சக்கரவர்த்தியைப் பார்த்து 'நீரே தன்யர், நீர் தரிசித்த வராகம் முந்தி லோகோத்தாரணத்தின் பொருட்டு ஆதி வராகமாய் அவதரித்த ஸ்ரீமந்நாராயணனே. இப்போதும் அவரே நம்மை உத்தாரணம் பண்ணும் பொருட்டு வராகமாய் உமக்குச் சேவை சாதித்தருளினர். அநேக காலமாய் நான் தபசு பண்ணியும் அவருடைய ஸேவை எனக்குக் கிடைக்கவில்லை. அவரைக் காணும் பாக்கியம் எனக்கு ஏற்படவில்லை' என்று சொல்லிவிட்டு மறுபடி 'பகவான் உமக்கும் நமக்கும் சீக்கிரத்தில் சேவை சாதிப்பதுடன் ஸ்ரீதேவியின் மனோரத பூர்த்தியையும் பண்ணிவைக்கப் போகிருர். ஆனபடியால் நீர் பசுவின்

பாலேக்கொண்டு இந்தப் புற்றுக்குத் திருமஞ்சனம் பண்ணிவையும்' என்ருர்.

மஹரிஷி நியமனப்படி புற்றுக்குத் திருமஞ்சனம் முதலானவைகள் செய்துவைத்தவுடன் பகவான் மார்க்கண்டேயருக்கும், சிபிச்சக்கரவர்த்திக்கும் சேவைசாதித்தார். ஸ்ரீதேவியும் அவ்விடம் எழுந்தருளவே பிராட்டியின் பிரார்த்தனைப்படி இந்த க்ஷேத்திரத்தின் சகல ஆதிபத்தியத்தையும் பிராட்டிக்கு அளித்திருப்பதாய் நியமித்துத் தாமும் பிராட்டியும் அவ்விடம் அர்ச்சா ரூபமாயிருந்து சகலருக்கும் காட்சியளித்துக்கொண்டு வருவதாயும் அருளிச்செய்தார். உடனே பிரம்ம ருத்ராதி சகல தேவதைகளும் இந்த க்ஷேத்திரத்திற்குவந்து பெருமாளையும் பிராட்டியையும் சேவித்தார்கள்.

அதன்பிறகு சக்கரவர்த்தி தாம் இன்னும் தெற்கே சென்று ராவணுதி ராக்ஷஸர்களை சம்ஹாரம் செய்து வருவதாய் மார்க்கண்டேயரிடம் தெரிவித்துக்கொள்ள, மார்க்கண்டேயரும் சக்கரவர்த்தியைப் பார்த்து, 'உம்முடைய சந்ததியில் அநேக தலைமுறைகளுக்குப் பிறகு தசரத சக்கரவர்த்தி என்பவர் ஜனிக்கப் போகிருர். அவருக்குக் குமாரராய் பகவான் ராமனென்னும் திருநாமத்துடன் அவதரித்து ராவணுதி அரக்கர்களை ஸம்ஹாரம் பண்ணி துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் என்னும் தர்மத்தை நிலைநாட்டுவதோடு லோகத்தார் தன்னை அடையும்பொருட்டு அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களைத் தாமே அனுஷ்டித்துக்காட்டி லோகத்தை வாழ்விக்கப்போகிருர். ஆகையால் நீர் நினைத்த காரியம் நிறைவேருது. அயோத்திக்குத் திரும்பிச்செல்லும்' என்று மறுமொழி கூறினர்.

திருவெள்ளறைகோவில் நிர்மாணமும், ஊர் ஏற்படுதலும்

மார்க்கண்டேயரின் வார்த்தைகளைக் கேட்ட சிபிச் சக்கரவர்த்தியும் தாம் நினைத்துவந்த காரியம் பூர்த்தி யாகாததை நினைத்துத் துக்கித்தவராய் மஹரிஷியைப் பார்த்து, 'ஸ்வாமி, அடியேன் இராவணுதி துஷ்டர்களை சம்ஹாரம் செய்வதாய் சங்கல்பித்துக்கொண்டு புறப் பட்டு வந்துவிட்டேன். அப்படிச் செய்யாமல் அயோத் திக்குத் திரும்புவேனுகில் க்ஷத்திரிய தர்மத்தை நழுவ விட்டவனுய் விடுவேன். அதனுல் பகவானுடைய தண்டனைக்குப் பாத்திரனுவேனே' என்று சொல்லி சோகித்தார். மஹரிஷியும் சக்கரவர்த்தியை நோக்கி 'உமக்கு ஒரு தோஷமும் ஏற்படாது. இருந்தாலும் நீர் நினைக்கும் தோஷ பரிகாரார்த்தமாக நமக்கு ஸேவை ஸாதித்த சுவேதநாதனுக்குக் கோவிலை நிர்மாணம் பண்ணியும், உம்முடைய தேசத்திலிருந்து பிராம்மணர் களையும், அவர்களுக்கு வேண்டிய மற்ற பரிஜனங்களையும் இவ்விடத்தில் குடியேற்றியும் வைப்பீராஞல் எந்த தோஷமும் உம்மை அணுகாது. வீண் சஞ்சலம் வேண் டாம்' என்ருர்.

மஹரிஷியின் நியமனத்தைச் சிரமேற்கொண்டு ஸ்ரீ சுவேதகிரி நாதனுன பகவானுக்குக் கோவிலை அமைத்து அந்தர்வேதியினின்றும் அக்னிஹோத்திரிகளா யிருந் துள்ள மூவாயிரத்து எழுநூறு பிராம்மண சிரேஷ்டர் களைக் குடும்ப சகிதமாயும் பரிஜனங்களுடனும் சக்கர வர்த்தி வரவழைத்தார். மார்க்கத்தில் ஒருவர் இறந்து போனதைக்கேட்டுச் சச்கரவர்த்தி துக்கித்தபோது பக வானும் சக்கரவர்த்தியைப் பார்த்து, "நீர் துக்கிக்கவேண் டாம்; நாமும் இறந்தவருக்குப் பதிலாக இருந்து நீர்

உத்தேசித்த மூவாயிரத்து எழுநூறு குடும்பக் கணக்குக் குறைவு ஏற்படாமல் செய்துவிட்டோம்" என்று நியமித்தார். இதைக்கேட்ட சக்கரவர்த்தி சந்துஷ்டராய்த் தாம் வரவழைத்த பிராம்மணர்கள் முதலானவர்களுக்குக் கிரகங்கள் முதலானவை நிர்மாணம்செய்து பெருமாளுடன்கூட மூவாயிரத்து எழுநூறு குடும்பப் பிரதிஷ்டை செய்து அவர்கள் அவ்விடம் நித்தியவாசம் செய்ய வேண்டிய வசதிகளையும் பெருமாளுக்குச் சகல உத்ஸவங்களையும் ஏற்படுத்தி ஸ்ரீ சுவேதகிரிநாதன் என்றென்றைக்கும் குன்றின்மேல் விளக்காய் பிரகாசித்துக்கொண்டிருக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அயோத்தி போய்ச்சேர்ந்தார்.

ஸ்ரீ சுவேதகிரிநாதனுக்குப் புண்டரீகாக்ஷன் என்னும் திருநாமம் ஏற்படுதல்

புண்டரீகன் என்னும் ஒரு யோகி இந்தத் திருவெள்ளறை க்ஷேத்திரத்தில் நந்தவனமுண்டாக்கித் துளசியைப் பயிர் செய்து அந்தத் துளசியைக்கொண்டு சுவேதகிரி நாதனையும், பங்கஜவல்லியையும் பூஜித்து வந்தார்.

பகவான் புண்டரீகனின் பக்தியின் பரிபக்குவத்தைக்கண்டு அவரைத் தன்யராக்க நினைத்துத் தமது தரிசனத்தை அளிக்க உத்தேசித்தார்.

சீதாபிராட்டி அசோகவனத்தி லிருந்தபோது "தம் பத்மதள பத்ராக்ஷம் ஸிம்ம விக்ராந்த காமினம் தன்யாப்பச்யந்திமேநாதம்" என்று அருளிச்செய்தார். அதாவது தாமரைப் புஷ்பத்தின் தளம்போல் கண்ணை உடையவரும், சிம்மத்தைப்போன்ற நடையை உடையவருமான என்னுடைய நாதனைப் பார்க்கிறவர்கள் தன்யர்கள் என்றார். பகவானும் தன்னுடைய காட்சியை

அளித்துப் பாக்கியவந்தர்களாகச் செய்ய நினைத்த தம் அடியார்களுக்குச் செந்தாமரைக்கண்ணனாய் சேவை கொடுத்து வருகிறான் என்பது அவனடியார்களாய் அவனுடைய சேவையைப் பெற்ற ஆழ்வார்கள் "தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவும் கலைமகனை" என்றும், "பாமரு மூவுலகு மளந்த பற்ப பாதாவோ, தாமரைக் கண்ணாவோ" என்றும் போற்றியிருப்பதிலிருந்து தெரிய வருகிறது.

அதே மாதிரி சுவேதகிரி நாதன் புண்டரிகனுக்கும் தம் மற்ற அடியார்களுக்குக் காட்சியளித்ததுபோல் செந்தாமரைக் கண்ணனாய் சேவை கொடுக்க அந்தத் தரிசனத்தைத் தனது நெஞ்சென்னும் உட்கண்ணால் கண்டு கொண்ட புண்டரிகனும் பகவானுடைய கண்ணழகில் ஈடுபட்டு ஆனந்த பரவசமடைந்து "ஜிதந்தே, புண்டரீகாக்ஷா" என்றும் "தாயாய் அளிக்கின்ற தண்தாமரைக் கண்ணா" என்றும் ஸ்தோத்திரம் பண்ணி கிருதார்த்தராய்ப் பகவானுடைய அடிசேரப்பெற்றார். "புண்டரீகாக்ஷா" என்று புண்டரிகன் அழைத்த நிமித்தம் சுவேதகிரிநாதனுக்குப் "புண்டரீகாக்ஷன்" என்றும், "செந்தாமரைக் கண்ணன்" என்றும் பெயருண்டாயிற்று.

கோவிலின் விவரம்

திரிச்சி - துறையூர் ரஸ்தாவில் 12-வது மைல் கல் தாண்டினவுடன் திருவெள்ளறைக்குப் போகும் மார்க்கத்தைக் காட்டிக்கொண்டு ஒருகைகாட்டி மரம் இருக்கிறது. அதற்கு எதிரில் சிறியதாய் ஒரு ஹநுமார் கோயில் நூதனமாய்க் கட்டப்பட்டிருக்கிறது. அங்கிருந்து இரண்டு பர்லாங்கு தூரம் தெற்கே சென்றால் கோவிலின் வாசலில் கொண்டுபோய்ச் சேர்க்க நல்ல

பாதை இருக்கிறது. அது திருவெள்ளறையின் வடக்கு வீதியில்போய்ச் சேருகிறது.

அப்படிச் சேரும் இடத்திற்குக் கிழக்கில் பெருமாளுடைய யானையேறும் மண்டபம் இருக்கிறது.

உடையவர் சந்நிதி

யானையேறும் மண்டபத்திற்குக் கீழ்ப்புறம் உடையவர் சந்நிதி இருக்கிறது. இந்த விசாலமான சந்நிதியில் உடையவர் மூலஉத்ஸவ பிம்பங்களும் ஒரு கிருஷ்ண சிலா விக்கிரஹமும் எழுந்தருளியிருக்கின்றன. இவர்களுக்கு ஆராதனமும் மாச வருஷ திருநக்ஷத்திர உத்ஸவங்களும் எங்களாழ்வான் வம்ஸஸ்தர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

தேர்

உடையவர் ஸந்நிதிக்குக் கீழ்ப்புறம் ஸ்ரீ புண்டரீகாக்ஷனுடைய தேரும், அதற்கு ஏறும் படிக்கட்டும் மேடையும் இருக்கின்றன.

பிரகாரங்கள்

ஸ்ரீபுண்டரீகாக்ஷ சந்நிதிக்கு ஜனங்கள் வசிக்கும் வீதியுள்பட ஐந்து பிரகாரங்கள் இருக்கின்றன.

திருவீதி

ஐந்தாவதான வெளிப்பிரகார வீதியில் மேல்புறம் நீங்கலாக மற்ற மூன்று பக்கங்களிலும் வீடுகள் இருக்கின்றன. வடவண்டைப்பக்கம் கோவிலின் முகத்துவாரம் இருப்பதால் இந்தப் பக்கத்தில் மட்டும் இரட்டைச் சிறகு உள்ள வீதியிருக்கிறது.

இந்த வீதியில் சந்நிதி முகத்துவாரத்திற்கு எதிரில் உள்ள நாலுகால் மண்டபத்தில், பெருமாள்

வீதிவலம் வந்தபிறகு அவருக்குத் திருவந்திக்காப்பு (கடதீபம்) நடக்கிறது.

மேற்சொல்லிய மண்டபத்திற்கு மேற்கில் வாகன மண்டபம் இருக்கிறது.


இந்த வீதி தென்மேற்கு மூலையில் ஸ்வஸ்தீகபந்தம் போல் ஒரு குளம் கட்டப்பட்டு இருக்கிறது. இது புராதனமானது. பார்க்கத்தகுந்தது. இதை மாமியார் மருமகட்டுப் பெண் குளம் என்கிறார்கள். இந்தக்குளத்தின் ஒருபடிக்கட்டில் ஸ்நானம் செய்பவர்களை மற்றொரு படிக்கட்டில் காணமுடியாது.

பதினெட்டாம் படியும் மொட்டைக் கோபுரமும்


திருவீதி, கோவில் மட்டத்துக்கு அதிக பள்ளத்திலிருப்பதால் கோவிலின் முகத்துவாரத்துக்குப் போகப் பதினெட்டுபடி ஏறிச்செல்லவேண்டியிருக்கிறது. பதினெட்டு படியிருப்பதால் இந்தப் படிக்கட்டுக்குப் பதினெட்டாம்படி என்று பேராயிற்று. திருமாலிருஞ்சோலை அழகர் சன்னதி வாசலிலுள்ள பதினெட்டாம் படியில் ஒரு தெய்வம் இருப்பதுபோல் இந்தப் படிக்கட்டிலும் ஒரு தெய்வமிருப்பதாகச் சொல்லபடுகிறது.

நான்காம் பிரகாரத்தின் திருமதிலுக்கு நாலுபக்கங்களிலும் கோபுர வாசல்களிருந்தாலும் வடக்கு வாசலே பிரதான வாசலாயிருந்து வருகிறது. மற்ற வாசல்கள் மூன்றும் அடைக்கப்பட்டிருக்கின்றன. இந்த வடக்கு வாசலின் கோபுரம் கட்டி முடிவடையாமல் மொட்டையாயிருப்பதால் மொட்டைக் கோபுரமென்று சொல்லப்படுகிறது.

மேலே சொன்ன பதினெட்டு படியும் ஏறி ஒரு கோபுரவாசலுக்குச் சென்றால் அவ்விடம் சிலையில் ஒரு



விமானம்



பூங்கிணறு

கிருஷ்ணன் இருக்கிறார். அவருக்குப் பிரார்த்தனையின் பேரில் வெண்ணெய் கொண்டுவந்து சாத்துகிறார்கள்.

நான்காம் பிரகாரம்

மொட்டைக் கோபுரவாசலில் நுழைந்து உள்ளே சென்றால் இந்தப் பிரகாரமிருக்கிறது. இந்தப் பிரகாரத்தின் மதிள் வெகு அழகாயும் அதி உன்னதமாயும் கட்டப்பட்டிருக்கிறது. அநேகமாயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டிருந்தாலும் சமீப காலத்தில் கட்டினது போலத் தோன்றுகிறது. மதிள் அழகைக் கண்டு பெரியாழ்வார் தாம் பாடிய பதிகத்தில் "மதிள் திருவெள்ளறை" என்றும் "மஞ்சுதவழ் மணிமாடமதிள் திருவெள்ளறை" என்றும் "செம்பொன் மதிள் வெள்ளறை" என்றும் புகழ்ந்து பேசியிருக்கிறார்.

இந்தப் பிரகாரத்தின் வடகிழக்கு மூலையில் ஒரு பெரிய மண்டபமிருக்கிறது. அது கனு உத்ஸவத்திற்காகக் கட்டப்பட்டபடியால் அதைக் கனு மண்டபம் என்கிறார்கள்.

இந்தப் பிரகாரத்தின் தென்புறத்தில் ஒரு பெரிய பாறை தெரிகிறது. அது சுவேதகிரியின் தென்பாகம். அவ்விடமிருந்து பார்த்தால் கோவில் ஒரு மலையின்பேரில் கட்டப்பட்டிருக்கிறது என்பது நன்றாகத் தெரியவரும். அந்தப் பாறையின் மத்தியில் 30 அடி நீளம் 20 அடி அகலம் 10 அடி உயரம் குடையப்பட்டிருக்கிறது. மேல் நெற்றிக்கண் வெகு சுத்தமாய் செதுக்கப்பட்டிருக்கிறது. அதில் மேல்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் யோகிகள் உட்கார்ந்து தபசு செய்யும்படியான குகை மாதிரியும் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பாறையின் மேலி

ருந்து தெற்கு நோக்கினுல் திரிச்சினுப்பள்ளி மலையையும் ஸ்ரீ ரங்கம் கோவில் கோபுரங்களையும் காணலாம்.

மேற்சொன்ன பாறைக்கு எதிரிலிருந்து கூப்பிட்டால் நன்ருக எதிரொலி உண்டாகிறது. திருவெள்ளறைக்கு வரும் யாத்திரீகர்கள் மேலே சொன்னபடி எதிரொலியை உண்டாக்கி சந்தோஷிப்பார்கள்.

பாறைக்கெதிரிலுள்ள வஸந்த மண்டபம் மிகவும் சிதலமாய் விட்டது. அதற்கு மேற்கில் பாறையின் பேரில் விழும் மழைஜலம் தங்க ஒரு சிறிய குளமிருக்கிறது.

மணவாள மாமுனி சந்நிதி

இது நான்காம் பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் இருக்கிறது.

பூங்கிணறு

மேற்படி சந்நிதிக்குக் கிழக்கில் இந்தக் கிணறு இருக்கிறது. இதிலுள்ள ஒரு குகையில் பங்கயச்செல்வி நாச்சியார் பகவான் ஆவிர்ப்பவிப்பதை எதிர்பார்த்துக் கொண்டு தபசு செய்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

மூன்றும் பிரகாரமாகிய ஆழ்வார் திருச்சுற்று

இந்தப் பிரகாரத்தில் பாதியில் ஆழ்வாராதிகளின் கோவில்கள் அமைக்கப்பட் டிருந்தபடியால் ஆழ்வார் திருச்சுற்று என்று பெயரிடப்பட்டது. இந்தப் பிரகாரத்திற்கு வாசல் வடபுறம் முகத்வாரத்திற்கு எதிரிலிருக்கிறது. அதில் நுழைந்து கிழக்கே திரும்பினுல் வடகிழக்கு மூலையில் ஆதியில் நம்மாழ்வார் எழுந்தருளியிருந்த மண்டபமிருக்கிறது. அதன்தென்புறம் பழைய கொட்டாரம் மிகவும் ஜீர்ணமாயிருக்கிறது. அதற்குத் தென்புறம் சந்நிதி மடப்பள்ளி யிருக்கிறது. மடப்

பள்ளிக்கு மேல்புறம் தாயார் சந்நிதியும் அதன் முன் மண்டபமும் இருக்கின்றன. இந்த மண்டபத்தில் தாயாரின் ஊஞ்சல் மண்டபமும் ஆழ்வார் ஆசாரியர்களின் அறைகளும் இருக்கின்றன. இந்தப் பிரகாரத்தின் மேலண்டைப் பக்கத்திலிருந்த தசாவதாரம் எம்பெருமான்களும் சில ஆழ்வார்களும் இந்த மண்டபத்தில் புதிதாய் கட்டப்பட்டிருக்கிற அறையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தாயார் சந்நிதி

இந்த சந்நிதி கர்ப்பக்கிரஹம், அர்த்த மண்டபம், மஹாமண்டபம், முன் மண்டபங்களோடு கூடி விசாலமாயிருக்கிறது. இதில் சுவேதகிரி நாச்சியாராகிய சண்பக வல்லித்தாயார் மூலவரும் உத்ஸவருமாயிருந்து சேவை சாதிக்கிறார். தேரன்றைய தினம் இந்தத்தாயார் புண்டரீகாக்ஷன் பங்கஜவல்லி நாச்சியார்களுடன் ஏகாசனத்திலிருந்து பக்தர்களுக்குக் காட்சியளித்து ஆனந்திப்பிக்கிறார். இவருக்கு நவராத்திரி உத்ஸவம் நடக்கிறது. பெருமாளைப்போல் நான்கு காலமும் திருவாராதனாதிகள் நடக்கின்றன.

சக்கரத்தாழ்வார் சந்நிதி

தாயார் சந்நிதிக்கு மேல்புறம் விசாலமான முன் மண்டபம், பிரதக்ஷணங்களோடு இது இருக்கிறது. இதிலுள்ள மூலவர் முன்புறம் சக்கரத்தாழ்வாராயும், பின்புறம் யோகா நரசிம்மனும் சேவை சாதிக்கிறார். இவருடைய உத்ஸவர் தாயார் சந்நிதி மஹா மண்டபத்தில் எழுந்தருளி யிருக்கிறார். பெருமாளுடைய பிரம்மோத்ஸவாதி காலங்களில் இந்த சந்நிதியில் விசேஷ ததியாராதனம் நடத்தப்படுகிறது. மற்றக் காலங்களி

லும் துவாதசி ததியாராதனம், வனபோஜனம் முதலா னவை செய்யவேண்டிய சௌகர்யங்களிருக்கின்றன.

மஹா பலிபீடம்

சுவேதகிரிநாதன் கிழக்கு முகமாயிருப்பதனுல் இந்தப் பலிபீடம் இந்தப் பிரகாரத்தின் கீழ்ப்புறம் இரண்டாம் பிரகார வாசலின் எதிரிலிருக்கிறது. இதற்குக் கீழ்ப்புறம் ஒரு பீடம் இருக்கிறது. அது தீபஸ்தம்பத்துக்காக ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தோன்று கிறது. இந்தப் பலிபீடம் மஹா சக்தி வாய்ந்தது. திருவெள்ளறையிலும் அதைச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலும் உள்ளவர்கள் தங்களுக்கும் தங்கள் கால் நடை முதலானவைகளுக்கும் ஏற்படும் பீடைகளை நிவர்த்திக்கும் பொருட்டும் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் பொருட்டும் இந்தப் பலிபீடத்திற்குத் திரு மஞ்சனங்கள் செய்துவைப்பதும் நெய்விளக்குப் போடு வதும் வழக்கமாயிருக்கிறது. பிரம்மோத்ஸவத்தில் பலி இந்தப் பீடத்திலேயே ஸமர்ப்பிக்கப்படுகிறது.

பலி பீடத்திற்குத் தென்புறம் ஒரு சுனையிருக்கிறது. இதிலுள்ள தீர்த்தம் மடைப்பள்ளிக்கு உபயோகப்படுத் தப்படுகிறது.

ஆர்யபடாள் வாசல்

இது பலி பீடத்திற்கு எதிரில் மேல்புறமிருக்கிறது. ஆதிகாலத்தில் ஆரியர்களால் காவல் புரியப்பட்டு வந்தமையால் இந்த வாசலுக்கு அந்தப் பெயர் வந்தது.

இந்த வாசலுக்கு உள்புறம் ஒரு பெரிய மண்டப மிருக்கிறது. அதன் வடமேற்கு மூலையில் சேனை முதலியார் சந்நிதியும், அதற்குக் கிழக்கில் பஞ்சபருவங் களுக்குப் பெருமாளுக்குத் திருமஞ்சனம் நடக்கும் மண்

டபமுமிருக்கின்றன. தென்புறம் உக்கிரா்ண அறையிருக்கிறது.

இந்த மண்டபத்தின் மத்தியில் த்வஜஸ்தம்பமும் பலிபீடமுமிருக்கிறது. பிரம்மோத்ஸவத்தில் பெருமாளுடைய கருடத்வஜம் இந்த த்வஜஸ்தம்பத்தில் ஏற்றப்படுகிறது.

நாழிகேட்டான் வாசலும் இரண்டாம் பிராகாரமும்

இரண்டாம் பிராகாரத்தின் வாசல் இந்தப்பெயரால் அழைக்கப்படுகிறது. பெருமாள் இந்த வாசலுக்கு வரும்பொழுது நாழிகை என்னவென்று கேட்டு ராஜோசாரமாய் இத்தனை நாழிகை ஆயிற்று என்று விண்ணப்பம் செய்யப்படுகிறபடியால் இந்தப் பெயருண்டாயிற்று. இந்த வாசலில் முன்புறம் துவாரபாலகர்களிருக்கிறார்கள். பின்புறத்தில் சங்கநிதியும் பதுமநிதியும் உட்கார்ந்துகொண்டிருக்கின்றன.

தேவதா பிம்பங்கள்

இந்த வாசலுக்கு உள்புறத்திலுள்ள மண்டபத்தின் நெற்றிக்கண்ணில் இராமாயணம் சித்ர ரூபமாய் எழுதப்பட்டிருக்கிறது. எதிரிலுள்ள சுவரில் சுமார் எட்டு அடி உயரமுள்ள சுவதையில் வேலை செய்யப்பட்ட பெரிய பிம்பங்கள் காண்கின்றன. அவைகளின் மத்தியில் ஸ்ரீ புண்டரீகாக்ஷனும் அவருடைய அருளைப் பெற்ற கருடன் சந்திரன் இடது பக்கத்திலும், சுப்பிரமணியன், சூரியன் வலது பக்கத்திலும் ஐராவதத்தோடு கூடிய இந்திரன் இரண்டு பக்கங்களிலும் இருக்கிறார்கள். கோவிலின் அடிவாரம் தென்புறம் சுவரில் கருடகர்வ பங்கமும் ஹரன் சாபம் தீர்த்ததும் பிம்ப ரூபமாய்

சுவதையில் கட்டப்பட்டிருக்கிறது. வடபுறம் சுவரில் முப்போதும் வானவரேத்தும் திருவெள்ளறையிலுள்ள முனிவர்களின் த்ரிஸந்திக்குரிய தேவதைகளான காயத்ரி, சாவித்திரி, ஸரஸ்வதி ஆகிய மூன்று பேர்களே யும் ஸ்திரீ ரூபமாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

மும்மூர்த்திகள்

இரண்டாம் பிராகாரத்தில் மேல்புறம் கோவிலின் அஸ்திவார சுவரில் துவாரபாலகர்களினுடையவும், பிரம்மா விஷ்ணு ருத்ரர்களுடையவும் சுவதாபிம்பங்க ளிருக்கின்றன. இந்தப் பிம்பங்களேக் கண்டு பிள்ளேப் பெருமாள் அய்யங்காரும் அவைகள் வைஷ்ணவர்களின் கொள்கையை வெளியிடுவதாக எண்ணி "கல்லிருந்தான் றந்தை கமலத்தோன், அக்கமலத்தி லிருந்தான் றந்தை யரங்கேச னன்றே, தொல்லே மறையுள்ளா னறையா நின்றமையா லுள்ளமே, கள்ளமின்றி வெள்ளறையான் ருளே விரும்பு" என்று நூற்றெட்டுத் திருப்பதி அந் தாதியில் பாடியிருக்கிறுர்.

கோவர்த்தனதாரி

கோவர்த்தனதாரியான கண்ணனுடைய பிம்பம் மும்மூர்த்திகளின் பிம்பங்களுக்குத் தெற்கிலிருக்கிறது.

கங்காதரன்

கங்காதரனுன சிவபிரான் பகிரதன் பிரார்த்தனேக் கிணங்கி, தமது சடைமுடியில் பெண் ரூபமா யிருந் துள்ள கங்கையைத் தன் கையில் வாங்கி அவளேப் பூமி யில் ஓடும்படிச் செய்ய உத்தேசித்து நிற்கும் அவசரமாய் ஒரு பிம்பம் மேலே சொன்ன மும்மூர்த்திகளுக்கும் வடக் கில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த பிரகாரத்திலுள்ள

தேவதா பிம்பங்களைக் கண்டே பெரியாழ்வாரும் தாம் பாடிய பதிகத்தில் "இந்திரனோடு பிரமன் ஈசனிமையவ ரெல்லாம் மந்திர மாமலர்கொண்டு மறைந்துவராய் வந்து நின்றார்" என்று சொல்லி யிருக்கிறார்.

உத்தராயண தக்ஷிணாயன வாசல்கள்

சுவேதகிரியின் மேலே செல்ல இரண்டு வாசல்க ளிருக்கின்றன. வட புறத்திலுள்ளது உத்தராயண வாசல். தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய இந்த வாசல் திறந்து வைக்கப்படும். தென்புறம் உள்ள தக்ஷிணாயன வாசல் ஆடி முதல் மார்கழி மாதம் முடிய திறந்து வைக்கப்படும். இந்த வாசல்கள் திறந்திருக்கும் அயன காலத்தைக்கொண்டு அந்தந்த அயனப் பெயரால் அழைக்கப்படுகிறது. இவைகளில் ஒரு வாசல் திறந் திருக்கும்போது மற்றொரு வாசல் மூடப்பட்டிருக்கும்.

பிரகாரத்திலிருந்து அயனவாசலை அடைய அஷ் டாக்ஷரக் கணக்கில் எட்டுப் படிகளிருக்கின்றன. ஷெ வாசலிலிருந்து மலையின் உச்சிக்குச் செல்ல காயத்திரி கணக்கில் 24 படிகளிருக்கின்றன. அவைகளை ஏறிச் சென்றால் சந்நிதியின் முன் மண்டபத்தை அடையலாம்.

சந்நிதி கருடன் கோவில்

அந்த முன் மண்டபத்தின் கீழ்ப்பாகத்தில் சந்நிதி கருடன் கோவில் இருக்கிறது. வடபுறம் கிரகண காலங்களில் திருமஞ்சனம் பண்ண ஒரு மேடையிருக் கிறது.

கண்ணாடி அறை

சந்நிதி முன் மண்டபத்தின் தென் பாகத்தில் பிரம்மோத்ஸவத்தில் பெருமாளும் தாயாரும் எழுந் தருளியிருக்கும் கண்ணாடி அறையிருக்கிறது.

சந்நிதி முன் மண்டபத்திற்கு உள்புறம் மஹா மண்டபமும் அமுதுபாறையும் இருக்கிறது. திருவண்ணாழி என்றும் விமானப் பிரதக்ஷணம் என்றும் சொல்லப்படுகிற முதல் பிரகாரத்திற்கு வாசல்கள் இந்த மண்டபத்திலேயே இருக்கின்றன.

கர்ப்பக்கிரஹம் - விமானம்

இந்தக் கர்ப்பக்கிரஹத்தில் சுவேதகிரிநாதனான ஸ்ரீ புண்டரிகாக்ஷப் பெருமாள் மூலவர் அதி உன்னதமாய் நின்ற திருக்கோலமாய் சேவைகொடுக்கிறார். வலதுபுறம் சூரியனும் இடதுபுறம் சந்திரனும் சாமரம் போடுகிறார்கள். இடதுபுறத்தில் அனந்தன் ஆதிசேஷன் புருஷரூபமாய் நின்றுகொண்டிருக்கிறார்கள். பூமி பிராட்டி உட்கார்ந்தவண்ணமா யிருக்கிறார். வலது பக்கத்தில் கருடன் நின்றுகொண்டும், மார்க்கண்டேயர் உட்கார்ந்து கொண்டு மிருக்கிறார்கள். இவர்களுக்கு வருஷத்திற்கொரு தடவை ஜேஷ்டாபிஷேகத்தில் தைலாபிஷேகம் நடத்தப்படுகிறது.

மூலவருக்கு முன் அமைக்கப்பட்டுள்ள ஸிம்மாசனத்தில் உத்ஸவர், வலது பக்கத்திலுள்ள பங்கயச்செல்வித் தாயாருடன் எழுந்தருளியிருக்கிறார். இந்தக் கோவிலுக்கு ஏற்பட்ட பஞ்சபேரங்களில் ஒருவர் நீங்கலாக மற்ற நால்வரும் இந்தக் கர்பக்கிரஹத்தில் எழுந்தருளியிருக்கிறார்கள். ஒருவர்மட்டும் ஒரு கலகத்தில் இந்த ஊரை விட்டு வெளியில் போய்விட்டதாயும், அவர் இப்பொழுது கொல்லி மலைக்குப் பக்கத்திலுள்ள மண் மலையில் மலையாளிகளின் ஸ்வாதீனத்திலிருப்பதாயும், மலையாளிகளால் அவருக்கு உத்ஸவங்கள் நடத்தப்படுவதாயும் சொல்லப்படுகிறது.

விமானத்தின் பெயர் விமலாகிருதி விமானம்.

தத்வம்

ஸ்ரீ புண்டரீகாக்ஷனும் பங்கஜவல்லித் தாயாரும் ஒருவரைவிட்டு ஒருவர் எந்தக் காலத்திலும் பிரியாம லிருந்துகொண்டு பகவானுக்கும் பிராட்டிக்கும் புஷ்பத் தையும் மணத்தையும் போலே பிரித்து நிலையில்லை என் னும் தத்துவத்தைக் காட்டிக்கொடுக்கிறார்கள்.

பங்கயச் செல்வியின் ஆதிக்யம்

பகவான் அளித்த வரத்தின்படி திருவெள்ளறையில் சகல ஆதிக்யமும் பங்கயச்செல்வியினுடையது. இந்த ஆதிக்யத்தின் அடையாளமாக ஒவ்வொரு புறப்பாட்டி லும் பெருமாளுக்கு முன் தாயார் பல்லக்கில் எழுந்தருளு வது வழக்கமாயிருக்கிறது. கோவிலின் கிராமமும் பங்கயச்செல்வி பேராலேயே அழைக்கப்படுகிறது. திரு வெள்ளறை முதலான கிராமங்களிலுள்ள நிலங்களின் பட்டாக்கள் பங்கயச்செல்வி பேரிலேயே ஏற்பட்டிருக் கிறது.

மேற்கூறிய ஆதிக்யத்தைப் பற்றிப் பெரியாழ்வா ரும் தமது பதிகத்தின் கடைசி பாசுரத்தில் ஸூசிப்பித் திருக்கிறார். அதாவது, "போதமர் செல்வக் கொழுந்து புணர் திருவெள்ளறையானை" என்றார். தனக்குப் பிறந் தகமான தாமரைப் பூவிலே அமரும்படியான செல் வத்தையுடைய பங்கயச்செல்வி அந்தத் தாமரைப்பூவை மறந்து க்ஷணகாலமும் பிரியமாட்டாதே "அகலகில் லேன்" என்று தன்னையே பற்றி நிற்கும்படி செய்து கொண்டுள்ள திருவெள்ளறையி லுள்ளவனை "கோல் தேடியோடுங் கொழுந்தது" என்கிறபடி ஒரு கொள் கொம்பை நாடிச்சென்ற கொடி அதைப் பற்றிக்கொண்டு படர்ந்தபின் அந்தக் கொம்பை அப்பிராதான்யமாக்கித்

தன்னைப் பிரதானமாக்கிக் கொள்ளுவதுபோல பங்கயச் செல்வியாகிய கொடி பற்றிப் படர்ந்து செந்தாமரைக் கண்ணரை அப்பிரதான்யராய்ப் பண்ணித் தன்னைப் பிர தானையாக்கிக் கொண்டாள் என்று வியாக்யான கர்த்தா அருளிச் செய்துள்ளார்.

பூஜை நிவேதனங்கள்

ஸ்ரீ புண்டரீகாக்ஷனுக்குப் பிரதிதினமும் நான்கு காலங்களிலும் பூஜை நிவேதனம் முதலானவைகள் நடந்து வருகின்றன. தினமும் சாயந்திரம் க்ஷீரான்ன நிவேதனமானவுடன் சந்நிதி முன் மண்டபத்தில் நடக்கும் நித்தியானுசந்தான கோஷ்டியில் திருவாய்மொழிப் பிரபந்தங்கள் சேவிக்கப்பட்டுச் சாற்றுமுறை செய்யப் படுகிறது. கோஷ்டிக்குத் தீர்த்த வினியோகமும் பிர சாத வினியோகமும் நடக்கின்றன.

உத்ஸவங்கள்

பிரம்மோத்ஸவம் பங்குனி மாதத்தில் நடக்கிறது. சிரவண நக்ஷத்திரத்தில் தேரும் தீர்த்தவாரியும் நடை பெறும். இதைத்தவிர ஏகாதசி, அமாவாசை, கோடை உத்ஸவம், திருக்கார்த்திகை முதலான சில்லரை உத்ஸ வங்களும் ஏற்பட்டு நடந்துவருகின்றன. பிரம்மோத்ஸவம் மூன்றும் திருநாள் பங்கயச்செல்வியும் ஸ்ரீ புண்டரீகாக்ஷ னும் ஸ்ரீரங்கத்திலுள்ள கொள்ளிடத்திற்கு எழுந்தருளு கிறார்கள். பகவானும் தாயாரும் பாதிராத்திரி வரையில் எழுந்தருளியிருந்து பக்தர்களுக்குக் காட்சியளித்து விட்டுத் திரும்பி திருவெள்ளறைக்குச் செல்லுகிறார்கள்.

தீர்த்தங்கள்

திருவெள்ளறையில் குச தீர்த்தம், பத்ம தீர்த்தம், க்ஷீரபுஷ்கரணி, வராக தீர்த்தம் முதலான ஒன்பது தீர்த்தங்களிருக்கின்றன. அவற்றுள் பிரதானமான குச தீர்த்தம் திரிச்சி-துறையூர் ரஸ்தாவிலிருந்து திருவெள்ளறைக்குப் போகும் பாதைக்கெதிரில் 15 கெஜம் தூரத்திலிருக்கிறது. பிரம்மோத்ஸவத்தில் பெருமாள் இதில் தீர்த்தம் சாதிக்கிருர். குசர் அஸ்திகர் என்னும் ரிஷிகள் இவ்விடம் தபசு செய்தபடியால் அவர்கள் பெயரால் "குசஹஸ்தி" என்று இந்தத் தீர்த்தம் அழைக்கப்படுகிறது.

வடஜம்புநாதர் கோவில்

இந்தக் கோவில் ஸ்ரீ புண்டரீகாக்ஷப்பெருமாள் கோவிலைச் சேர்ந்ததும் அதில் நின்றும் படித்தரம் பெற்று வருகிறதுமான ஒரு சிவபிரானுடைய கோவில். திருவெள்ளறை ஊருக்குக் கிழக்கே மூன்று பர்லாங்கு தூரத்திலுள்ள ஒரு பாறையில் குடைந்து நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. அது மேற்கு முகமாயிருக்கிறது.

திருவானைக்காவலிலுள்ள ஜம்புலிங்கத்தை பூஜித்து வந்த ஒரு யானை காவேரியில் வெள்ளம் ஏற்பட்ட காரணமாக ஜம்புகேஸ்வரம் சென்று ஜம்புநாதனை பூஜிக்க முடியாததனுல் அவருக்குப் பதிலாக இந்தக் கோவிலிலுள்ள லிங்கத்தைப் பூஜித்து வந்தபடியாலும் ஆதிகாவேரியான கொள்ளிடத்திற்கு வடக்கில் இந்தக் கோவில் இருப்பதாலும் இதற்கு வடஜம்புநாதர் கோவில் என்று பெயரிடப்பட்டது.

இதிலுள்ள ஜம்புநாதரும் ஒரு பாறையைக் குடைந்து செதுக்கப்பட்டுள்ள குகையின் மத்தியிலிருக்கிருர். இவருக்குத் தெற்கில் ஸ்ரீ புண்டரீகாக்ஷப்பெரு

மாளும் கணேசனும் பாறையில் செதுக்கப்பட்டிருக் கிருர்கள். வடபுறத்தில் ஜம்பு மஹரிஷி, பைரவன், தக்ஷிணுமூர்த்தி, சுந்தரர், சண்டிகேசுவரர் முதலானவர் களின் சிலாபிம்பங்கள் இருக்கின்றன. பாறைக்கு முன்னுல் ஒரு மண்டபம் அமைக்கப்பட்டிருக்கிறது.

அந்த மண்டபத்திற்கு வெளியில் கிழக்கு நோக்கி சுப்பிரமணிய சுவாமியினுடைய ஒரு சிறிய கோவிலிருக் கிறது. அதிலுள்ள சுப்பிரமணிய சுவாமி மயில்வாகனத் தில் உட்கார்ந்துகொண்டு ஆறுமுகம் பன்னிரண்டு கைகளுடன் வலது பக்கத்தில் தெய்வயானை நிற்க வெகு அழகாய்க் காட்சி யளிக்கிருர். இது வள்ளியை மணப்ப தற்கு முன்புள்ள அவஸரம் என்று சொல்லுகிருர்கள்.

சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குத் தெற்கில் உயர்ந்த இடத்தில் அகிலாண்டேஸ்வரிக்குக் கிழக்கு முக மாக ஒரு சிறிய கோவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அம்மனும் வெகு அழகாகச் சேவை அளிக்கிருள். அம்மன் கோவிலின் அடிப்பீடத்தில் பல்லவர் காலத்துச் சிலா சாஸனங்கள் இருக்கின்றன.

இந்த வடஜம்புநாதர் கோவிலின் உத்சவ பிம்பங் கள் திருப்பைஞ்ஞீலி கோவிலிலிருப்பதாய்ச் சொல்லப்படு கிறது. இந்தக் கோவிலில் காலை மாலை இரண்டு வேளை களிலும் பூஜை நடந்து வருகிறது.

இந்தக் கோவிலுக்குப் பக்கத்தில் பிம்பமில்லாத தும் ஜீரணமானதுமான ஒரு கோவில் இருக்கிறது.

அதிக செலவில்லாமல் தங்கள் கல்யாணங்களை நிறை வேற்றிக்கொள்ளும் இச்சையுடைய குடியானவர்கள் இந்த வடஜம்புநாதர் கோவிலுக்கு வந்து கல்யா ணத்தை நடத்திக் கொள்கிருர்கள். அவர்களுக்கு உப யோகப்படும் பொருட்டு மேள வாத்தியம் ஏற்படுத்தப்

பட்டிருக்கிறது. கல்யாணங்கள் அதிகப்பட அதிகப்பட கல்யாணக்காரர்களுக்கு இன்னும் அதிகமான வசதிகள் உண்டாக்கிக் கொடுக்க அவகாசம் ஏற்படும்.

வடஜம்புநாதர் கோவிலுக்கு ஒரு மைல் தூரத்தில் கம்பக்கரடு என்று ஒரு சின்ன குன்று இருக்கிறது. அதன்பேரில் ஒரு ஸ்தம்பமிருக்கிறது. அதைக் கம்பத்து ராயன் என்று அழைக்கிறார்கள். அதை விஷ்ணுவின் அம்சமாக நினைத்துக் குடியானவர்கள் வழிபடுகிறார்கள். சனிக்கிழமைகளில் விளக்குகள் போடப்படுகிறது.

ஊரின் ஆதிவளமும் தற்கால நிலைமையும்

ஆழ்வார்களின் பாசுரங்களிலிருந்து ஆதியில் திருவெள்ளறை வானளாவிய மாளிகைகளால் நிரம்பியிருந்ததாகவும் மாம்பொழில் முதலான சோலைகளால் சூழப்பட்டு நீர்வளம், நிலவளம் பொருந்தியிருந்ததாகவும் தெரியவருகிறது. தில்லை மூவாயிரம், திருவெள்ளறை ஆறாயிரம் என்கிற பழமொழிப்படி. தில்லைவாழ் அந்தணர்களின் வீடுகள் மூவாயிரமாயிருந்தபோது திருவெள்ளறையில் வாழ்ந்துவந்த பிராமணர்களின் வீடுகள் ஆறாயிரமாக இருந்தது. பின்னால் ஒரு காலத்தில் மண்மாரி பெய்து ஊர் மேடிட்டுப்போய் நீர்வளம் நிலவளம் குன்றிப்போயிற்று என்று சொல்லப்படுகிறது. ஜலக்கஷ்டத்தினாலும், தான்யவிளைவுக் குறைவினாலும் ஜனங்கள் தங்கள் வாழ்நாளைக் கஷ்டமின்றி நடத்த வசதிகளையளிக்கும் இடங்களைத் தேடிக்கொண்டு இந்த ஊரை விட்டு வெளியேறும்படி ஏற்பட்டு விட்டது. நாளுக்கு நாள் இந்த ஊரின் பெருமை குறைந்துகொண்டே வந்து விட்டது.

கோவிலின் திட்டம் வரவு வகையரா

ஈஸ்டு இந்தியா கம்பெனியின் அதிகாரத்துக்கு உட்படுவதற்குமுன் இந்தக் கோவிலின் படித்தரமும், திட்ட

மும் அதிகமாக இருந்ததாகவும், கோவிலின் சகல உத்ஸவங்களும் அதிக விமரிசையாக நடத்தப்பட்டு வந்ததாகவும் கம்பெனி அதிகாரத்துக்கு வந்து வரவு செலவுத் திட்டம் கேட்டபொழுது கோவிலின் பரிபாலன கர்த்தாவாக இருந்துவந்தவர் வரவு செலவை அதிகமாகக் காண்பித்து விட்டால் சந்நிதி தம்முடைய பரிபாலனத்தினின்றும் மாறிவிடப்போகிறதென்று பயந்து குறைந்த வரவு செலவுத் திட்டத்தைக் கொடுத்ததாயும், அதன்படி கம்பெனி சாங்கிஷன் செய்து விட்டிருப்பதும் அதனால் திருவெள்ளறைக் கோவிலின் படித்தரமும் உத்ஸவாதிகள் முதலானவை குறைந்துவிட்டதாயும் சொல்லப்படுகிறது.

கவர்மெண்டிலிருந்து மோகினி, வருஷம் 1-க்கு ரூ. 770 கொடுக்கப்படுகிறது. நிலவரும்படி வருஷம் ஒன்றுக்கு ரூ. 2,000-க்குள்பட்டு வருகிறது. இந்த வரும்படிக்குள் சகல செலவுகளும் நடக்கவேண்டியிருக்கிறது. படித்தரத்திற்கே பற்றுமலிருக்கிறது. கோவிலின் ஜிர்ணோத்தாரணம் தர்ம சிந்தனையுள்ளவர்களால் செய்யப்பட்டாலொழிய தேவஸ்தான வரும்படியிலிருந்து செய்யமுடியாமலிருக்கிறது. புராதன கோவிலானபடியால் ஜிர்ணோத்தாரணம் செய்யவேண்டிய அவசியமிருக்கிறது.

தேவஸ்தானம் செய்துள்ள வசதிகள்

ஊரின் ஜல கஷ்டத்தை நீக்க தேவஸ்தானச் செலவில் தண்ணீர்க் குழாய்கள் கோவில் வாசலிலும், வீதிகளிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. மின்சார விளக்குகள் கோவிலிலும், வீதியிலும் தேவஸ்தானச் செலவில் போடப்பட்டிருக்கிறது. இவைகளின் பயனாகச் சில நூதன கெட்டிக்கட்டிடங்கள் ஏற்பட ஆரம்பித்திருக்கிறது. அபிமானிகளான ஸௌராஷ்டிரர்களின் சத்திரம் இரண்டும் வைசியர்களுடைய சத்திரம் ஒன்றும் ஏற்பட்டிருக்கின்றன. வீட்டிற்குள் தண்ணீர் வசதி ஏற்பட குழாய்கள் வைத்துக்கொள்ள அவகாசமிருந்து வருகிறது. தார்மிகர்கள் வீடுகளோ, சத்திரங்களோ

கட்டித் தண்ணீர்க் குழாய்களை அவைகளுடைய ஜல வசதிக்காக உபயோகப்படுத்திக் கொண்டால் தண்ணீர் தருவதற்காகப் பெருமாளுக்கு ஏற்படும் பணச்செலவு குறைய ஹேதுவுண்டு.

ஊரின் ஆரோக்ய நிலை

இந்த ஊர் இதைச் சுற்றிலுமுள்ள ஊர்களைக் காட்டிலும் உயர்ந்த மேட்டிலிருப்பதாலும் புஞ்சைகளால் சூழப்பட்டிருப்பதாலும் இவ்விடம் வீசப்பட்ட காற்று ஜலசம்பந்த மன்றியில் வரண்ட காற்ருயிருப்பதாலும் சுத்தமானதா யிருப்பதாலும் நோயாளிகள் கொஞ்ச காலம் வசித்துத் தங்கள் நோய்களை நிவர்த்தித்துக் கொள்ளத் தக்க இடமென்று டாக்டர்களால் எண்ணப் படுகிறது.

தவிர க்ஷயரோகத்தால் துன்பப்படுபவர்களுக்கு ஆரோக்கியத்தையளிக்கும் ஒரு ஸ்தலமாக இந்த ஊர் கருதப்பட்டு இதில் வாசம்செய்யப் பெரிய டாக்டர்களால் சிபார்சு செய்யப்படுகிறது.

தென்னிந்தியாவில் ஆதிக்ஷேத்திரமானதும் புராதனமானதுமான திருவெள்ளறை க்ஷேத்திரத்தை ஒவ்வோர் ஆஸ்திகரும் வந்து சேவித்துத் தங்கள் வினைகளைப் போக்கிக்கொண்டு கோவிலின் ஜீர்ணோத்தாரணத்திற்கும் படித்தரத்தைச் செம்மைப்படுத்துவதற்கும் தங்களால் இயன்றமட்டும் உதவி புரிந்து இகத்திலும் பரத்திலும் சுகத்தைப்பெற்று ஆனந்திக்கவேண்டியது அவசியம்.

முப்போதும் வானவ ரேத்தும் முனிவர்கள்
வெள்ளறைமேய அஞ்சனம் புரியும் திருவுருவனை
ஆதியை அமுதத்தை எஞ்சலின்றி நின்றுஏத்த
வல்லார் இமையோர்க் கரசு ஆவார்கள்.

சுபம்